**தலைப்பு 255 – கொழும்பு மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (அ) | சீதாவக்க | (உ) | மொறட்டுவை | (ஐ) | ஸ்ரீ ஜயவர்தனபுர |
| (ஆ) | பாதுக்க | (ஊ) | தெஹிவளை | (ஒ) | கெஸ்பேவ |
| (இ) | இரத்மலானை | (எ) | கடுவெல | (ஓ) | ஹோமகம |
| (ஈ) | மஹரகம | (ஏ) | கொழும்பு | (ஔ) | கொலொன்னாவ |
| (க) | திம்பிரிகஸ்யாய | | | | |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கொழும்பு மாவட்டச் செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூலை 07 ஆம் திகதி மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

கொழும்பு மாவட்டச் செயலகத்திற்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 979 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 787 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு ரூபா 192 மில்லியன் அதாவது 20 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழும் | 559 | 541 | 18 | 03.22 |
| மூலதன | 420 | 246 | 174 | 41.43 |
| மொத்தம் | **979** | **787** | **192** | 19.61 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 22 அமைச்சுக்களிலிருந்தும் 12 திணைக்களங்களிலிருந்தும் முறையே ரூபா 5,530 மில்லியன் தொகையும் ரூபா 2,935 மில்லியன் தொகையுமாக ரூபா 8,465 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் முறையே ரூபா 4,080 மில்லியன் தொகையும் ரூபா 2,809 மில்லியன் தொகையுமாக ரூபா 6,889 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டில் சேமிப்பு முறையே ரூபா 1,450 மில்லியன் மற்றும் ரூபா 126 மில்லியன் தொகை அதாவது 26.2 சதவீதம் மற்றும் 4.3 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25501 | 42 | 37.5 | 32 | 33.9 | 200 | 158 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 31.3 மில்லியன் ஆகக் காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6003/0000/00/0031/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கு மீதி ரூபா 694.5 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கொழும்பு மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 255 – மாவட்டச் செயலகம் - கொழும்பு

---

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பிணைப்பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | அடியிதழ் புத்தகப்பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 | ஜீ.ஏ.என். 20 படிவத்தின் பிரகாரம் அடியிதழ் புத்தகப்பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(ஈ) | எரிபொருள் மற்றும் உராய்வு எண்ணெய் இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | வாகன பட்டியல்படுத்தல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) | வாகன பட்டியல்படுத்தல் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பிட்டுக் குழுவினதும் வருகை தொடர்பான பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 வழிகாட்டி | கொள்வனவுக் குழுவின் வருகைப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஒ) | கேள்வி கோரல் பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.2.1 வழிகாட்டி | கொள்வனவுக் குழுவின் வருகைப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

02 செலவின விடயங்களுக்கு ரூபா 173,216,428 தொகையான மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதத்திற்கும் 46 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

#### 3.2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதியேற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ரூபா 4,615 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,165 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1,450 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. பயன்படுத்தப்பட்ட ரூபா 3,165 மில்லியன் நிதியேற்பாடுகளிலிருந்து உரிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதியத் திணைக்களத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 2,364 மில்லியன் நிதியேற்பாடுகளிலிருந்து ரூபா 2,238 மில்லியன் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 126 மில்லியன் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**3.3 பொது வைப்புக் கணக்குகள்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களை விஞ்சிய ரூபா 129,984,587 கூட்டுத்தொகையான 22 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 215(3) இன் ஏற்பாடுகளுக்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாது மாவட்ட செயலகத்தினால் 2014 திசெம்பர் மாதத்தின் போது ரூபா 2,156,553 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. 2015 பெப்ரவரி 25 ஆந் திகதி அதில் ரூபா 798,980 தொகை அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 694,542,433 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. 13 பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலும் பொது வைப்புக் கணக்குகளின் மீதி முறையே ரூபா 471,596,086 மற்றும் ரூபா 285,847,719 தொகைகளாக ரூபா 757,443,805 கூட்டுத்தொகையாக இருந்தது. அதன்படி ஒதுக்கீட்டுக் கணக்கிற்கும் பொது வைப்புக் கணக்கிற்குமிடையிலான வேறுபாடு ரூபா 62,901,372 ஆகக் காணப்பட்டது.

(ஈ) மாவட்ட செயலகத்தின் பொது வைப்புப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 285,847,719 தொகையும், பொது வைப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் படி மீதி ரூபா 222,946,348 ஆகவும், சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் படி மீதி ரூபா 142,746,286 ஆகவும் இருந்தன. அந்த கணக்குகளும் பதிவேடுகளும் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 6003/0000/00/0001/0000/000 ஆம் கணக்கு இலக்க பொது வைப்புக் கணக்கில் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் புத்தகங்களின் பிரகாரம் மீதியொன்று காணப்படாதிருந்த போதிலும் திறைசேரிப் புத்தகங்களின்படி ரூபா 10,000,000 வரவு மீதியொன்று காணப்பட்டது.

(ஊ) அரசாங்கத்தின் 06 நிறுவனங்களினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 760,903 கூட்டுத்தொகையான செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

---

25501 ஆம் விட இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றுகளின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 6,294,253 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது. 2015 யூலை 24 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 1,105,926 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அத்திகதி வரையில் ரூபா 5,188,327 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது. அந்த நிலுவைக் கடன் மீதி 02 மாதங்கள் முதல் 20 வருடங்கள் வரையிலான கால வீச்சில் கொண்டுவரப்படுகின்ற போதும், அந்த மீதியை அறவீடு செய்யும் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள மாவட்ட செயலகத்தின் உத்தியோகத்தரொருவரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 151,381 தொகையான கடன் மீதி தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 15.10.1 ஆம் பிரிவின் படி அறவிடப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அந்தக் கடன் மீதி நிலுவையாகக் காணப்படுகின்றது.

(இ) மரணித்த மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதி ரூபா 2,047,451 ஆகக் காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, அந்தக் கடன் மீதி ரூபா 1,055,244 இனால் அதாவது 52 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. கடன் மீதியில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட 02 வருடங்களுக்குக் குறைவான கால வீச்சிற்குரிய கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 929,267 ஆகவும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 297,299 ஆகவும் காணப்பட்டது. அந்தக் கடன் மீதிகளை அறவிடுதல் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

(ஈ) இடமாற்றலாகிச் சென்ற, வேலை நீக்கம் செய்யப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,173,100 ஆக இருந்தது.

(உ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களப் புத்தகத்தின் படி அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் மீதி ரூபா 156,876,930 ஆக இருந்ததுடன் திறைசேரிப் புத்தகங்களின் படி அந்த மீதி ரூபா 158,074,062 ஆக இருந்தது. அதன் படி ரூபா 1,197,132 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறை மற்றும் வழங்கப்பட்ட ஏனைய சிபாரிசுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கொழும்பு மாவட்ட செயலகத்திலும் 13 பிரதேச செயலகங்களிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் படி 61 பொருள் அலகுகள் பற்றாக்குறையும் 268 பொருள் அலகுகளின் மிகையும், 641 பொருள் அலகுகளை பொருட் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கொழும்பு மாவட்ட செயலகத்தின் பொருட் பதிவேடு, பொது 219 மற்றும் பொது 141 என்ற மாதிரிப் படிவங்களும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் முறையான பிரகாரம் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செயலகத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத 01 வருடத்திற்குக் குறைந்த காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 6,334,319 ஆக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியளவில் 11 செலவின விடயங்களில் சேமிப்பு ரூபா 1,559,146 ஆக இருந்த போதிலும், அந்த சேமிப்பு ரூபா 2,290,510 இனால் மிகைத்து ரூபா 3,849,656 தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ii) ஒதுக்கீட்டுக் கணக்கில் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் ரூபா 136,226 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் குறைத்துப் பதியப்பட்டிருந்தன.

**3.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மாவட்ட செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானதாக இருந்தன. தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் 20 மாடிகளையுடைய புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக 2001 ஆம் ஆண்டின் போது ரூபா 1,400 மில்லியன் கிரய மதிப்பீடொன்றின் அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்கான முதலாவது கட்டத்திற்காக ரூபா 815.36 மில்லியன் தொகையும், இரண்டாவது கட்டத்திற்காக ரூபா 445.5 மில்லியன் தொகையுமாக ரூபா 1,260.86 மில்லியன் கூட்டுத்தொகை மத்திய பொறியியல் பணியகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 சனவரி 15 ஆந் திகதி வரையில் கட்டிடத்தின் 06 மாடிகளின் நிர்மாணம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வேலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ரூபா 295,000,000 முற்பணம் செலுத்தி இரண்டு வருட காலம் கடந்திருந்த போதிலும், வருடாந்தம் போதியளவான நிதியேற்பாடு கிடைக்காமை, உரிய பிரகாரம் செயல்முன்னேற்றம் மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்காமை மற்றும் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கட்டிட நிர்மாண நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது.

(இ) திருத்தப்பட்ட மொத்தக் கிரய மதிப்பீட்டிற்காக தேவையான அமைச்சரவை அங்கீகாரம் 2014 ஆகஸ்ட் 24 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும், கிரய மதிப்பீட்டுப் பரிசீலனைக் குழுவின் அங்கீகாரம் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் திறைசேரிக்குக் கிடைத்திருக்கவில்லை.

(ஈ) 2014 ஏப்ரல் 04, 2014 யூன் 02, 2014 ஒக்தோபர் 28 மற்றும் 2015 மார்ச் 24 போன்ற திகதிகளில் மாவட்ட செயலாளரின் தலைமையில் பூர்த்தி செய்யப்பட்ட 06 மாடிகள் தொடர்பாக நடைபெற்ற கலந்துரையாடலின் படி குறைபாடுகளை விரைவாக சரிசெய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் அந்த குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) இந்தக் கட்டிடத்தில் கழிவுகளை அகற்றும் முறைமையொன்றை அமைப்பதற்கு எந்தத் திட்டமொன்றும் எழுத்து மூல உடன்படிக்கையும் இன்றி கொழும்பு மாநகர சபைக்கு 2012 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 9,932,195 தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 20 ஆந் திகதி ரூபா 8,000,000 தொகையும், 2014 ஒக்தோபர் 28 ஆந் திகதி ரூபா 1,817,535 தொகையுமாக ரூபா 9,817,535 கூட்டுத்தொகை நகரசபையிலிருந்து மீள பெறப்பட்டிருந்தது. செலுத்தப்பட்ட தொகை மற்றும் மீளப்பெறப்பட்ட தொகைகளுக்கிடையே ரூபா 114,660 தொகையான வேறுபாடு செய்திப்பத்திரிகை அறிவித்தலுக்கான செலவினமாக கொழும்பு மாநகர சபை ஈடுசெய்திருந்தது. கழிவுகளை அகற்றும் முறைமையொன்று 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் மாவட்ட செயலகத்திற்கு அண்மித்ததாக அமைக்கப்படாதிருந்ததுடன் அரசாங்கப் பணம் நகர சபையில் 02 வருடங்களுக்கு அண்மித்த காலமாக விளைவற்று நிறுத்தி வைப்பதற்கு மாவட்ட செயலகம் அவகாசமளித்திருந்தது.

### 3.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்ட செயலகத்தின் புதிய கட்டிடத்திற்கு தளபாடப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக கேள்வி கோரும் போது ஆகக்கூடிய விலை சமர்ப்பித்த மெட்ரோ பொலிட்டன் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 24,076,616 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உரிய சகல மாதிரிகளுக்கும் இணங்கியதாக ஒப்பந்தக்காரரினால் செயலகத்திற்கு வழங்கப்பட்டமைக்கு பொறுப்பவாய்ந்த உத்தியோகத்தரின் சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.1 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டிகளின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 8.12.2(அ) மற்றும் (ஆ) வழிகாட்டியின் படி ஒப்பந்தத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க உரிய வழங்கல் மேற்கொள்ளப்பட்டமைக்கு பொறியியலாளரின் சான்றிதழ் காணப்படவில்லை.

(iii) ஒப்பந்தக்காரர் 2013 திசெம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பித்த விலைப்பட்டியலின் படி வழங்கிய பொருட்களின் பெறுமதி (பெறுமதிசேர் வரியுடன்) ரூபா 17,945,579 ஆக இருந்த போதிலும், உடன்படிக்கையின் படி வழங்கப்பட்ட பொருட்கள் பெறுமதி சேர் வரியுடன் பெறுமதி ரூபா 24,076,616 ஆக இருந்தது. அதன்படி ரூபா 6,131,037 தொகையான வேறுபாட்டிற்காக ஒப்பந்தக்காரரினால் 04 மாத தாமதத்தின் பின்னர் 2014 யூன் 24 ஆந் திகதி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் 2.7 ஆம் பந்தியின் படி 04 மாதகால தாமதத்திற்காக ரூபா 2,149,897 தாமதக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) உடன்படிக்கைக்கு புறம்பாக 06 மேசைகள் மற்றும் ஒரு ஹைபேக் வெயார் வழங்குவதற்காக முறையே ரூபா 1,138,368 தொகை மற்றும் ரூபா 24,225 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் காணப்படாதிருந்ததுடன் அந்தப் பொருட்களும் கிடைக்கப்பெற்றமைக்கான உறுதிப்படுத்தல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 63 | 57 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 24 | 19 | 05 |
| (iii) | இரண்டாம் நிலை | 828 | 589 | 239 |
| (iv) | ஆரம்ப நிலை | 90 | 82 | 08 |
| | மொத்தம் | 1,005 | 747 | 258 |